செ.வெ.எண்:  23                                                        நாள்:  21.05.2021

# பத்திரிக்கைச் செய்தி

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல்-2021 நடைபெற்று முடிந்ததை முன்னிட்டு, 149-அரியலூர், 150-ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதிகளில் போட்டியிட்ட வேட்பாளர்களின் தேர்தல் செலவு கணக்குகள் தேர்தல் செலவின பார்வையாளர் தெரிவித்துள்ளவாறு 25.05.2021 அன்று 149-அரியலூர், 150-ஜெயங்கொண்டம் ஆகிய இரு சட்டமன்ற தொகுதிகளுக்கும் அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக முதன்மை கூட்ட அரங்கில் (முதல்தளம்) தேர்தல் செலவினம் ஆய்வு செய்யப்படவுள்ளது.

எனவே 149-அரியலூர், 150-ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதிகளில் போட்டியிட்ட வேட்பாளர்கள் / முகவர்கள் தவறாது நேரில் காலை 10.00 மணிக்கு ஆஜராகி தேர்தல் செலவின அறிக்கையை அனைத்து ஆவணங்களுடன் கையொப்பம் இட்டு தாக்கல் செய்யுமாறும், செலவினங்களில் எவ்வித விடுதல்களுமின்றி முழுமையாக செலவினம் தொடர்பான கணக்கு அறிக்கையினை தாக்கல் செய்யுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**